இராமகாதை

காட்சியும் கருத்தும்

தமிழாக்கம்

முனைவர் பூ.சு.கணேஷ்மூர்த்தி

தமிழ்த்துறை, திராவிடப் பல்கலைக்கழகம்



ந சுப்பு ரெட்டியார் 100

Centenary Committee Publications

தமிழாக்கம்:
முனைவர் பூ.சு.கணேஷ்மூர்த்தி
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
திராவிடப் பல்கலைக்கழகம், குப்பம், ஆந்திர மாநிலம்

இராமகாதை

காட்சியும் கருத்தும்

The Original Source:

RAMAYANA

The Story of Rama

Retold and Illustrated by

BAPU

ந சுப்பு ரெட்டியார் 100

Centenary Committee Publications

இராமகாதை
காட்சியும் கருத்தும்

All rights are reserved. No part of the publication may be reproduced, stored in a retrieval system (including but not limited to computers, disks, external drives, electronic or digital devices, e-readers, websites), or transmitted in any form or by any means (including but not limited to cyclostyling, photocopying, docutech of other reprographic reproductions, mechanical, recording, electronic, digital versions) without the prior written permission of the publisher, not be otherwise circulated in any form of binding or cover other than that in which it is published and without a similar condition being imposed on the subsequent purchase.

முதல் பதிப்பு – ஆகஸ்டு 2020

வெளியீடு:

ந சுப்பு ரெட்டியார் 100

Centenary Committee Publications

Na Subbu Reddiar 100 Educational Trust

AD-13, 5th Street, Anna Nagar West, Chennai – 600 040

ISBN 978-81-945046-5-8

Wrapper Design: **Centenary Committee**
Printed at: DJ Prints, Chennai – 600 095

அன்புப்படையல்



Bapu

Sattiraju Lakshmi Narayana

15 Dec 1933 :: 31 Aug 2014

BAPU

Films:

His Films *Saakshi* (1968), *Seeta Kalyanam* (1978), *Tyagayya (*1981), *Pelli Pustakam* (1991) & *Sri Rama Rajyam* (2011) featured in Internal Film Festivals.

Art Work:

Several of his art works were displayed in National Film Theatre, London (1978) and several International Telugu Conferences in USA.

Awards:

- 2 National Films Awards
- 7 Nandi Awards from government of Andhra Pradesh
- 3 Three Filmfare Awards
- Lifetime Achievement Award from Indian Institute of Cartoonist, 2001
- Rashtrapathi Award from Academy of Fine Arts, Tirupathi
- Received Padma Shri, 2013

International Positions:

- Delegate of UNESCO
- Consultant for Ford Foundation

Other Honours:

. Asthana Vidwan by Andhra Pradesh Academy of Arts.

. South Indian Film Director's Association Award for Best direction – Sampoorna Ramayanam, 1972

. Visishta Puraskaramu from Potti Sreeramulu Telugu University, 2002

. Life Time Achievement Award from Telugu Association of North America

. "Shiromani" award from Books: American Telugu Association, 1992

. Honorary Doctorate "Kala Prapoorna" from Andhra University, 1991

. Raja-Lakshmi Award in 1982 from Sri Raja-Lakshmi Foundation, Chennai

DRAVIDIAN UNIVERSITY
ద్రావిడ విశ్వవిద్యాలయం
(An Inter-State University Accredited by NAAC with "B" Grade)
Srinivasavanam, KUPPAM- 517 426, Chittoor Dist., (A.P.) INDIA

Prof.T.Anuradha
M.C.A., Ph.D.,
Vice-Chancellor I/c

Foreword

It is a matter of great pleasure to write the foreword to the book *Ramakaathai,* translated into Tamil from the original Ramayana (The story of Rama) in English by Dr.P.S.Ganeshmoorthy, Assistant Professor in the Department of Tamil, Dravidian University, Kuppam. Valmiki's Ramayana is the story of Rama, and how he killed the ten headed Ravana. Rama is the ideal prince, *brave and accomplished,* devoted to his duty, unfaltering in truth.

The Ramayana describes the wanderings and adventures of Rama who goes into forest exile for fourteen years on his father's order voluntarily accompanied by his devoted wife Sita and loyal brother Lakshmana.

Rama's travels, demon's magic, Exploits of Hanuma in Lanka, bridging on the ocean and fighting from the clouds all make the Ramayana a story of high adventure in unexplored areas, while Rama's obedience to his father, for the faithfulness and womanly love of Sita, the loving devotion of Rama's brothers and the veneration of saints ennoble and sanctify the work in the eyes of Indians and make it of universal interest around the people and School children and Society.

The job of translation has been carried out with high devotion and sincerity. The messages conveyed by the colourful cartoons by the famous Indian cartoonist Dr Sattiraju Lakshmi Narayana (Bapu) in the original version have been meticulously brought out in the translation version. I congratulate Dr.P.S.Ganeshmoorthy for his sincere effort.

T. A—ha.

(Prof. T. ANURADHA)

Ph: +91 8570 278236 (O), Cell: +91 9441000188 Fax: +91-8570-278209
e-mail: vc_dravidianuniversity@rediffmail.com, rajamaata@yahoo.co.in; Web: dravidianuniversity.ac.in

முனைவர் பூ.சு.கணேஷ்மூர்த்தி
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
திராவிடப் பல்கலைக்கழகம், சீனிவாசவனம்
குப்பம், ஆந்திர மாநிலம்





நன்றியுரை

இராமாயணம் வால்மீகி என்னும் முனிவரால் சமசுகிரதமொழியில் இயற்றப்பெற்ற நூலாகும். இந்நூல் இந்து சமயத்தின் முக்கியமான நூல்களில் ஒன்று. இராமாயணத்தை கம்பர் என்னும் புலவர் தமிழில் இயற்றினார். கோசல நாட்டின் தலைநகரமான அயோத்தியைச் சேர்ந்த இரகுவம்ச இளவரசரான இராமர் அவர் மனைவி சீதை ஆகியோரின் வாழ்க்கையை விவரிக்கும் இந்த இதிகாசம் உறவுகளுக்கு இடையேயான கடமைகளை எடுத்துக்காட்டுகின்றது. சிறந்த வேலையாள், சிறந்த தம்பி, சிறந்த மனைவி, சிறந்த அரசன் போன்றோர் எப்படி இருக்கவேண்டும் என்பது இதன் கதை மாந்தர்கள் வழி விளக்கப்படுகின்றது.

திருமலை திருப்பதி தேவஸ்தானத்தாரால் வெளியிடப்பெற்ற ***RAMAYANA -The story of Rama - Retold and Illustrated by BAPU*** என்ற ஆங்கில நூலை சத்திராசு லட்சுமி நாராயணா என்கின்ற பப்பு **(BAPU)** எழுதினார். இவர் ஆந்திரத் திரைப்படத்துறை இயக்குநர் மற்றும் சிறந்த ஓவியர் ஆவார். இராமாயணகாதையை எளிதில் சிறார்களும் புரிந்துகொள்ளும் வகையில் காட்சியுடன் கூடிய விளக்கத்துடன் இவர் உருவாக்கியுள்ளது வரவேற்கத்தக்கது.

இந்நூலை தமிழாக்கம் செய்யவேண்டும் என்ற என்னுடைய நீண்ட நாளைய கனவு பலித்தது. இராமரின் அநுகிரகத்தால் இராமர் சென்ற இராமாயணத்தில் குறிக்கப்பெற்ற தண்டகாரண்யம் (அடர்ந்த காட்டுப்பகுதி) தென்பகுதியை அடியேன் சென்று காணும் பாக்கியம் கிடைத்து. இராமரது பரிபூரண அருளால் இந்த பணியை தடையின்றி முடிவுக்குக் கொண்டு வர முடிந்ததற்கு சந்தோஷப்பட வேண்டியவனாகிறேன்.

இந்நூலிற்கு அணிந்துரை வழங்கி சிறப்பித்த பேராசிரியர் T அநுராதா, துணைவேந்தர், திராவிடப் பல்கலைக்கழகம் அவர்கட்டு எனது மனமுவந்த நன்றியினை உரித்தாக்குகின்றேன்.

“இராமகாதை - காட்சியும் கருத்தும்” என்று தமிழாக்கம் செய்த இந்நூலை வெளியிட நிதி உதவி வழங்கி வெளியிடும் திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழக மேனாள் தமிழ்த்துறை நிறுவனர் மற்றும் தலைவர் பேராசிரியர் முனைவர் ந.சுப்புரெட்டியார் அவர்களின் பெயரில் நிறுவப் பெற்ற ந சுப்பு ரெட்டியார் 100 கல்வி அறக்கட்டளைக்கு என்றென்றும் எனது நன்றியினை காணிக்கையாக்குகிறேன்.

பதிப்புரை

பேராசிரியர் முனைவர் ந சுப்பு ரெட்டியார் அவர்கள் எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று, ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர். திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர். பல பல்கலைக்கழகங்களில் சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி, நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர். பல ஆய்வாளர்களை உருவாக்கியவர். வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர். **136 [135 +1]** நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015 – 2016) 108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும் மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

பேராசிரியரின் நூற்றாண்டில் (2015 – 2016) நூற்றாண்டுக்குழு தமிழகமெங்கும் நடத்திய 108 நிகழ்வுகள் அகில இந்திய சாதனையாக அங்கீகரிக்கப் பெற்றுள்ளன. நூற்றாண்டில் பேராசிரியரின் தமிழ்த்திறத்தையும், அறிவுநுட்பத்தையும் வெளிக்கொணரும் பொருட்டு பன்னிரெண்டு நூட்கள் வெளியிட்டப்பெற்றன. அவரது 120 நூல்கள், இந்திய அரசு நல்கிய **ISBN** எண்களுடன், மின் நூல்களாக மாற்றுப்பெற்று https://archive.org/details/@centenary1916nsr2016 என்ற இணையதளத்தில் அனைவரும் பதிவிறக்கம் செய்யும் வகையில் அமைக்கப்பெற்றுள்ளன.

பேராசிரியரின் படைப்பான "*கவிஞர் வாலியின் இராமாநுஜ காவியம் – ஒரு மதிப்பீடு*" எனும் நூலை பேராசிரியரின் நூற்றாண்டிற்குப் பின்பும் (102வது) , இராமாநுஜரின் ஆயிரமாண்டிற்குப் பின்பும் (1002வது) நூற்றாண்டுக்குழு 2018ல் வெளியிட்டது.

பேராசிரியரின் நூட்களை அடித்தளமாக்கொண்டு சுமார் 25 முதுகலைப்பட்ட மாணாக்கர்கள், ஆய்வியல் நிறைஞர் மாணாக்கர்கள் மற்றும் முனைவர் பட்ட ஆய்வாளர்கள் பல்வேறு பல்கலைக் கழகங்களில் (சென்னைப் பல்கலைக்கழகம், மதுரை காமராஜ் பல்கலைக்கழகம், பாரதிதாசன் பல்கலைக்கழகம், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், அழகப்பா பல்கலைக்கழகம் மற்றும் தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்) ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர்.

அவ்வாறு ஆய்வு செய்யும் மாணாக்கர்கள் மற்றும் ஆய்வாளர்கட்கு **ந சுப்பு ரெட்டியார் 100 கல்வி அறக்கட்டளை NSR100 Kamatchi Ammal Fellowship** மற்றும் **NSR100 Research Fellowship** வழங்கி வருகின்றது. அதன்கீழ், பேராசிரியரின் ஏதேனும் ஒரு நூலை ஆய்வுக்குரிய மையக்கருத்தாக தேர்ந்தெடுத்து திறனாய்வு செய்யும் ஆய்வு மாணாக்கர்கட்கு உதவித்தொகையும், நூலைத் தேர்ந்தெடுக்க ஆலோசனையும், தேர்ந்தெடுக்கப் பெற்ற நூலும் வழங்கப்பெறுகின்றன. இறுதியில், அவ்வாய்வேடுகள் நூலாக்கம் செய்யப்பெற்று, அந்நூல்களின் படிகள் ஆய்வாளர்கட்கு வழங்கப்பெறுவதோடு, மேற்குறிப்பிட்ட இணையதளத்திலும் பதிவேற்றம் செய்யப்பெறுகின்றன.

மூன்று முனைவர் பட்ட ஆய்வாளர்கள் ஆய்வு மேற்கொண்டு, சென்னை பல்கலைக் கழகம் (1993), மதுரை காமராஜ் பல்கலைக் கழகம் (2017) மற்றும் பாரதியார் பல்கலைக் கழகம் (2020) ஆகியவற்றில் ஆய்வேடு சமர்ப்பித்து முனைவர் பட்டம் பெற்றுள்ளனர். ஐந்து முதுகலை பட்ட மாணாக்கர்கள் (திராவிடப் பல்கலைக் கழகம் : 2017 – 2019) ஆய்வேடு சமர்ப்பித்துள்ளனர். ஐந்து ஆய்வியல் நிறைஞர் மாணாக்கர்கள் (தமிழ்ப் பல்கலைக் கழகம் : 2018 – 2019) ஆய்வேடு சமர்ப்பித்து ஆய்வியல் நிறைஞர் பட்டம் பெற்றுள்ளனர். காவேரி மகளிர் கல்லூரியின் ஐந்து முதுகலை பட்ட மாணாக்கர்கள் (பாரதிதாசன் பல்கலைக் கழகம் : 2018 – 2020) ஆய்வேடு சமர்ப்பித்துள்ளனர்.

இவை தவிர்த்து, **ந சுப்புரெட்டியார் 100 கல்வி அறக்கட்டளை** பல்வேறு தமிழறிஞர்கள் மற்றும் தமிழாய்வாளர்கள் இயற்றிய சிறந்த நூல்களை தெரிவுசெய்து, அவர்களை சிறப்பிக்கும் வகையில், வெளியிட்டு வருகின்றது. இந்நூல்கள் பதிவேற்றமும் செய்யப்பெறுகின்றன.

முனைவர் பூ சு கணேஷ்மூர்த்தி திருவேங்கடவன் பல்கலைக்கழக தமிழ்த்துறையில் ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்றவர். இவர் தமிழாக்கம் செய்த இந்நூலை அறக்கட்டளை வெளியிட்டு மகிழ்கிறது.

நூற்றாண்டுக்குழு

இலங்கையின் அரசனான இராவணன் தேவர்களை பலவிதத்தில் அச்சுருத்திவந்தான். தேவர்கள் அனைவரும் ஒன்றினைந்து சென்று அகில உலகத்தைகாத்தருளும் விஷ்ணுவிடம் இராவணன் செய்யும் அட்டூழியங்களுக்கு ஒருமுற்றுப்புள்ளி வைக்க அவனிடம் முறையிடுகின்றனர். பாம்பின் மீது பள்ளிகொண்டிருந்த விஷ்ணு தேவர்கள் கூறும் துயரக்கதைகளை அமைதியுடன் கேட்டான்.



தேவர்கள், சித்தர்கள், கின்னரர்கள் மற்றும் குபேரர்கள் கையில் மடிய முடியாதபடி பிரம்மனிடம் சாகா வரம் பெற்றவன் இராவணன். இந்நிலையில் உலகத்தை உருவாக்கிய விஷ்ணு ஒரு குழுவுடன் கூடிய மனிதர் மற்றும் மிருகம் மூலமாக இராவணன் செயலுக்கு ஒரு முடிவை கட்டதிட்டமிடுகிறான். இதன்படி திக்பாலர்களை பூமியில் குரங்குகளாக பிறக்க ஆணையிடுகின்றான் விஷ்ணு.

விஷ்ணு உயரிய நோக்கத்திற்காக மனித அவதாரமாக உருவெடுத்து தனது ஆத்மாவினை பானைக்குள் தேனாக புகுத்துகிறான்.



கோசலயின் மன்னனான தசரதனுக்கு வாரிசு பிறக்கவில்லை ரகுகுல வம்சம் தன்னுடன் முடிவடைய கூடாது என்றெண்னி புத்ரகாமேஸ்டி யாகத்தை வெகுவிமரிசையாக முன்னெடுத்து விழாவாக கொண்டாடினான். அவ்வாறு செய்த அந்த யாகத்திலிருந்து விஷ்ணு தனது ஆத்மாவினை பானைக்குள் புகுத்துகிறான். அத்தேனை தசரதனின் மூன்று ராணிகளுக்கும் பங்கு பிரித்து கொடுக்கப்படுகிறது. கடவுள் விஷ்ணு கௌசல்யாவின் மகனாக இராமன் பிறக்கிறான். சுமித்திரை மகனாக இலஷ்மணன்,சத்ருகன் பிறக்கின்றனர். இளைய ராணியான கைகேயிக்கு பரதன் பிறக்கின்றான்.



நான்கு இளவரசர்களையும் கலையில் கற்று தேர்ந்த முனிவரின் குருகுலத்தில் சேர்க்கப்படுகின்றனர். தசரதனுக்கு மூத்த மகன் இராமனின் மீது தனி கவனம் காரணம், இராமனின் திறனையும், பண்புகளையும் கண்டு பெருமை கொள்கிறான்.



இலங்கையில் பிராட்டி லட்சுமி பெண் குழந்தையாக பிறந்தார். ஜோதிடர்கள் மூலமாக முறைபெண்ணால் உயிருக்கு ஆபத்து இருப்பதாக எச்சரிக்கின்றனர். இராவணன் அக்குழந்தையை பெட்டியிலிட்டு கடலில் எறிகின்றாரன். அக்கடலில் எறிந்த இடம் காய்ந்த நிலமான மிதிலையாகும். ஜனகன் மிதிலையின் மன்னனாவான், இவன் நிலத்தை உழும் போது அப்பெட்டி அவனுக்கு கிடைக்கின்றது. ஜனகன் அழகானஅப்பெண்ணை கண்டெடுத்து அதை தத்தெடுத்து அக்குழந்தைக்கு சீதை என பெயரிடுகின்றான்.



ஜனகன் அவரது அரண்மணையில் சிவ தனுசு ஒன்றிருந்தது அதனின் சிறப்பு என்னவென்றால் வலிமை மிகுந்த ஆயிரம்பேர்களாலும் அதை தூக்க முடியாது. ஒரு நாள் ஜனகன் தற்செயலாக சிவதனுசை பார்க்கையில் இளம் பெண்ணானசீதை தனது விரல்களால் சாதாரணமாக வில்லினை தூக்குகிறாள். ஆதலால்அந்த வில்லினை எந்த ஆண்மகன்தூக்கி நிறுத்துகிறானோ அவனுக்கேசீதையை மனம் முடிக்க எண்ணுகிறான்.



விசுவாமித்திர முனிவர் தசரதினிடம் வந்து அவனது மகன் இராமனை அனுப்பும்படி கேட்கிறார், அரக்கர்களால் மாசுபட்ட சடங்கு சாம்பிராதாய புனிதத்தை பாதுகாக்க திட்டமிடுகிறார். தசரதன் தனது அன்பான மகனை அபாயமான பணிக்குஅனுப்ப தயங்குகிறான். ஆனால் முனிவரின் வலிமையான சாபம் அனைவருக்கும் கிடைத்திடுமோ என அஞ்சி ஒப்புகொள்கிறான். ஆகவே இராமனும் லஷ்மணனும் விசிவாமித்திரரை நோக்கி காட்டிற்கு செல்கின்றனர்.



இவர்கள் அனைவரும் காட்டிற்குள்ளே நுழைகின்றனர். இவர்களை அரக்கி தாடகைதடுத்து வழி மறுக்கிறாள். இராமன் அப்பெண்ணரக்கி மீது அம்பை விட தயங்குகிறான். ஆனால் விசுவாமித்திரர் இராமனிடம் அம்பைவிட வலியுறுத்துகிறார்.இராமன் ஒரே அம்பினால் அவளை கொன்றுவிடுகிறான்.



முனிவர் இராம,இலஷ்மண சகோதர்களிடம் ஆலோசிக்கிறார் தெய்வீக ஆயுதங்களான தீ, காற்று, வெளிச்சம், நீர் இவைகளை அழைத்து யாகத்தில் உபயோகிக்கலாம்.



விசுவாமித்திரன் சடங்கு சாம்பிராதாய புனிதத்தை முன்னேற்றமடைய செய்கிறான். இரண்டு அரக்க சகோதரர்களான மாரிச்சன் மற்றும் சுபாவு வானத்தில் தீமூட்டி மாசுபடுத்தி அசுத்தம் செய்ய முயற்சி செய்கின்றனர். இராமன் சடங்கு சாம்பிராதாய புனிதத்தைப் பாதுகாக்கும் வண்ணம் மாரிச்சன் மற்றும் சுபாவு அம்பால் கொல்லப்பட்டு ஏழு கடலுக்கப்பால் வீசப்படுகின்றனர்.



பின்னர் சடங்கு சாம்பிராதாய புனிதத்தை காப்பதில் வெற்றியடைபடுகிறது. விசுவாமித்திரன் இராமன் இலஷ்மணனையும் வழி நடத்தி மிதிலைக்கு அழைத்துசெல்கிறான். சிவ தனுஷை வலைத்து சீதையை மணம் முடிப்பதற்காக அரசர்கள்மற்றும் இளவரசர்கள் பல்வேறு இடங்களிலிருந்து வந்து வில்லை வலைக்க முயற்சிச்செய்து முடியாமல் போனது. சிறந்த வீரனான இராவணனும் முயன்று முடியாமல் போனது.



பின்னர் இராமன் சென்று முயற்சித்து வில்லை எளிதாக தூக்கி இரண்டாக உடைத்துவிடுகின்றான்.



அரசனான ஜனகன் சீதையை இராமனுக்கு திருமணம்செய்து

கொடுக்கிறான்.



சிவதனுசு உடைந்ததும் நூறு ஷத்திரியர்களை கோடாலியால் கொன்ற பரசுராமன் கோபம் கொள்கிறான். துருப்பிடித்த சிவதனுசை உடைத்ததாக இராமனை கேலி செய்கிறான். பரசுராமன் தைரியத்தோடு விஷ்ணுவின் அம்பை எதிர்த்தவர். இராமன் தனது கையினால் அம்பை எடுக்கிறான், பின்னர் இராமரின் மிக வலிமையாக செயல்படும் கைகளை கண்டு இராமனின் பலத்தை உணர்கிறான். அதற்கு பிறகு இராமன் விஷ்ணுவின் சிறந்த அவதாரமே என பரசுராமன் கருதுகிறான்.



அரசனான தசரதன் தன் திறந்த அரசவையில் எதிர்வரும் காலத்திற்கு அரசன் இராமன் எனவும், அவருக்கு கிரீடம் சூடப்படுவதாக அறிவிக்கின்றான். இந்த நாளின் சுப விழாவின் ஏற்பாட்டை அரசவையில் முதன்மையானவரும் முனிவர்களின் தலைவரான வசிஷ்ட முனிவர் மூலமாக ஏற்பாடு செய்கிறார்.



கைகேயின் பணிப் பெண்ணான மந்தாரை இராமனுக்கு கிரீடம் சூடி இளவரசன் ஆக இருக்கும் நிலையை அறிந்து எஜமானி கைகேயிடம் சென்று நஞ்சு வார்த்தை கூறி தடுக்க முயலுகிறாள். கௌசல்யா சமூகஅந்தஸ்தில் கைகேயை குறைத்துள்ளதாக மந்தாரை விவரிக்கிறார். நீண்ட காலத்திற்கு முன் தசரதனுக்கு கைகேயி போர்க்களத்தில் உதவி செய்திருந்த தருணத்தில் கைகேயைக்கு இரண்டு வரங்களை கொடுத்திருந்தான். அதை இப்பொழுது கேட்கும்படி கைகேயிக்கு வலியுறுத்துகிறார் மந்தாரை.



தசரதன் கைகேயி அறைக்கு செல்கிறார். தசரதனிடம் அவள் இரண்டு வரங்களை கேட்கிறாள். ஒன்று இராமன் பதினான்கு ஆண்டுகள் காட்டிற்கு செல்ல வேண்டும், இரண்டு கைகேயின் மகன் பரதனுக்கு இளவரசனாக முடிசூட்டவேண்டும். வயதான தசரதன் அநியாய இந்நிகழ்வை கேட்டு திகைத்துப் போகின்றான்.



கைகேயி ராமனின் தந்தை கொடுத்த இரண்டு வரங்கள் கொடுத்ததைக் கூறி அதை கௌரவிக்கும் வகையில் காட்டிற்கு செல்ல சொல்லுகிறாள். இராமன் ஒத்துக்கொண்டு சிரித்துக்கொண்டே காட்டிற்கு செல்கின்றான். இலட்சுமணன் கோபத்துடன் கைகேயியை வாளைக்கொண்டு வெட்ட நினைக்கிறான். ஆனால் இராமன் அதை தடுக்கிறான்.



இராமனை சீதையும், லட்சுமணனும் பின் தொடர்ந்து செல்கின்றனர்.

அயோத்யா காட்டிற்கு செல்கின்றனர்.



தசரதன் இத்துயரத்தில் இருந்து மீளவில்லை. அரசன் நோய்வாய்பட்டவுடன் நீண்ட காலங்களுக்கு முன் நடந்த நிகழ்ச்சி நினைவிற்கு வந்தது. பார்வையற்ற தாய், தந்தையரின் இளம் மகனை கொன்றதால் அவர்கள் சாபமிட்டனர். நாங்கள் எப்படி அன்பான மகனை இழந்து வாடுகிறோமோ அதே போல் நீயும் ஒருநாள் அன்பான மகனை இழந்து வாடுவாய் என அவர்கள் இட்ட சாபம் பலித்து உண்மையானது. இராமனை நினைத்து அழுதுக்கொண்டே இறக்கின்றான்.



பரதன் தன் தாய்மாமன் வீட்டிற்கு சென்றிருந்த சமயத்தில் இந்நிகழ்வு நடந்தது. அயோத்தி திரும்பிய பின்னர் நடந்த நிகழ்வை கண்டறிந்து தன் தாயின் தவறான முடிவை கேட்டு இளவரசனாக முடிசூட மறுக்கின்றான்.



ஆனால் இராமனின் விசுவாசமான பரதன் இராமன் வராமல் அயோத்திக்கு செல்ல மறுக்கின்றான். நகரத்திற்கு வெளியே புறநகரப்பகுதியில் ஒரு குடிசை அமைத்துக்கொண்டான். இராமனின் பாதுகையை சிம்மாசனமாக வைத்து அவன் பேரில் இராஜ்ஜியம் அமைத்தான்.



தண்டகாரண்யத்திற்காக தென்பகுதிக்கு பயணிக்கும் போது இராமன் அழகான கோதாவரி நதியில் அங்கமான பஞ்சவதியை தேர்வு செய்து அங்கே தங்கினான். இராமன் இடைக்கால எளிமையான சந்நியாச வாழ்வில் இயற்கையை அனுபவிக்கிறான், இவருடன் சீதையும், இலஷ்மணனும் உடன் இருந்தனர். ஒருநாள், இராவணனின் தங்கை சூர்பணகை இராமனின் ஆணழகை பார்த்து காதல் வலையில் விழுந்தாள்.



தன்னை அழகான பெண்உருவமாக மாற்றிக்கொண்டு இராமனை கவர்ந்திழுக்க நினைக்கின்றாள்.



ராமனோ இலஷ்மணனிடம் அவளை அனுப்புகிறான். சென்ற இடத்தில் அவளின் மூக்கும் காதுகளும் அறுக்கப்பட்டன. பின் அவளது அசிங்கமான உருவம் வெளிப்பட்டது. இராமனிடம் இணக்கம் கொண்ட சீதை வெளியில்இருப்பதை கண்டு அஞ்சினான். ஆனால் இராமனோ சீதையை தவிர வேறொரு பெண்ணை கண்ணெடுத்து பார்க்காமல் ஏகபத்தினி விரதனாக இருந்தான். மேலும்அவன் அவளது உண்மை நிலையை அறிவான்.



இராவணன் பித்துபிடித்து ஆத்திரத்தில் இருந்தான். இராமனை பழிவாங்கும் நோக்கத்தில் சீதையை கடத்தினான் இராவணன். நல்லறிவில் மிகுந்த விபிஷ்ணன் அவனை எச்சரித்தான். மரியாதை மிகுந்தவர் அடுத்தவர் மனைவியை கடத்துவது பாவம் . பகையின் காரணமாக வீரமுள்ள இராமனிடம் மோதுவது பேரழிவைத்தரும் என்று அறிவுறுத்துகிறான். இராவணன் அவனது எச்சரிக்கையை ஏற்கவில்லை.



இராவணன் தனக்கு நம்பிக்கையான மாரிச்சனிடம் தங்கமான் போல வடிவம் கொண்டுஆடம்பரமான சீதையை கவர்ந்திழுக்க ஆணையிட்டான். சீதையின் தேவையை அறிந்து ராமன் தங்கமானை பிடித்து தர முயன்றான். மானோ இராமனை வழி நடத்தி காட்டினுள் வெகுதூரமாக வழி நடத்தி கொண்டுச் சென்றது.



இராமன் அதை துரத்திக்கொண்டு தங்குமிடத்திற்கு சென்றவுடன் ராஷ்ச்சனின் தந்திரம் என உணர்ந்தான், அந்த மானை நோக்கி ஓர் அம்பையிடுகிறான். தனது அசல் உருவத்திற்கு மாறிய மாரிச்சன் இராமனின் குரலில் உரக்க சத்தமாக “ ஆ சீதா ! ஆ இலஷ்மணா ! “ சொல்லிக்கொண்டே இறக்கிறான்.



அக்குரலை கேட்ட சீதை இராமன் எதோ ஆபத்தில் இருப்பதாக எண்ணி உடனேஅவசரமாக சென்று கவனிக்குமாறு இலஷ்மணனை வலியுறுத் துகின்றான். இலஷ்மணன் இது ஒரு ராட்சசனின் சூழ்ச்சியென்று சீதையை சமாதானபடுத்த முயற்சிக்கிறான். ஆனால் சீதை கண்மூடிதனமாக கவலையோடு இராமனின் சாவில் ஆதாயத்திற்கு முயற்சிப்பதாக அநியாயமாக குற்றம் காட்டுகின்றாள். இலஷ்மணனின் மனம் ஆழமாக வருத்தப்பட்டுக் கொண்டு சென்று இராமனைத் தேடுகிறான்.



பின்னர் இராவணன் பிச்சையெடுப்பவன் போல் தோற்றம் கொண்டு சீதை தனியாக இருக்கும் சமயத்தில் பிச்சை கேட்கிறான்.

ஒரு தட்டில் பழங்களுடன் அவனருகே அடியெடுத்து வைத்தான். இராவணனின் மிக கொடூரமான உருவம் வெளிப்பட்டதை கண்ட சீதை மயங்கி விழுந்தாள். ஆனால் நல்குபார சாபத்தின் காரணமாக விருப்பமில்லாத பெண்ணை தொட்டால் அவனது தலை தூள் தூளாக வெடித்துவிடும். ஆகவே சீதையை பூமியோடு பெயர்த்துக்கொண்டுஆகாயத்தில் பறந்துவிடுகின்றான்.

தசரதனின் பழைய நண்பனான ராஷ்சச சிறகுகளை கொண்ட ஜடாயு
சீதையை மீட்பதற்காக இராவணனிடம் வீரத்தோடு சண்டையிடுகின்றது.
ஆனால் அதன் சிறகுகளை வெட்டி எறிகின்றான் இராவணன்.
ஜடாயு இறந்து வந்து பூமியில் விழுகின்றது.



சீதை வெளியேறியவுடன் இராமன் நம்பிக்கையுடன் போன பாதையை கண்டறிய முயலுகிறான். சீதை தனது கழற்றப்பட்ட பாதி நகைகளை சேலையைக் கிழித்து அதில் மூட்டையாக கட்டி கீழே வீசுகின்றாள். ஆஞ்சநேயன் சூரிய கடவுளிடம் வணங்கிக்கொண்டிருக்கையில் அம்மூட்டை அவனது கையில் விழுகிறது.



இராவணன் கட்டுப்பாட்டில் சிறைபிடிக்கபட்ட சீதை அவனது தோட்டத்தில் வைக்கப்படுகின்றாள். அவனது ராணியாக ஒப்புக் கொள்ளவில்லை என்றால் கொன்றுவிடுவேன் என்று அச்சுறுத்தபடுகின்றாள். அவன் பன்னிரண்டு மாதங்கள் கால அவகாசம் கொடுத்தான்; அதற்குள் முடிவெடுக்கும்படி சீதையிடம் கூறினான்.



காடு முழுவதும் சுற்றி திரிந்து சீதையை கூக்குரலிட்டுக் கொண்டே போகிறான் இராமன். ஆனால் அவனால் கண்டுபிடிக்க முடியவில்லை. ஆகவே அவன் மிகவும் மகிச்சியற்று காணப்படுகின்றான்.



ரிஸ்யமுகா மலை அருகில் சகோததர்கள் அனுமானை சந்திக்கின்றனர். கிஷ்கிந்தாவின் அரசனாக இருந்து அகற்றபட்ட சுக்ரிவனை அறிமுகபடுத்துகிறான் அனுமான். சீதையால் கீழே வீசப்பட்ட பொன் மூட்டையை இராமனிடம் காட்டுகிறான் அனுமன். சுக்ரிவன் சீதையை மீட்பதற்காக தனது ராணுவ படையின் சேவையை உபயோகிக்க மகிழ்ச்சியுடன் ஒப்புகொள்கிறான். திரும்ப வந்து இராமனிடம் ஒன்றை கோருகின்றான். அவனது சகோதரரான வாலியை கொன்று அபகரித்த ராஜ்யத்தை மீட்டு தர வேண்டுகிறான்.

வாலி தன்னிடம் நேரடியாக போரிடும் நபரின் பாதி சக்தியை பெறும் அற்புதமான நிலையை கொண்டுள்ளான். இராமனிடம் உல்லாச போக்கிடம் இருந்தது, அங்கு சூழ்ச்சியோடு கொல்ல திட்டமிடுகிறான். அவன் மீதுவெறுப்பாக உள்ள உருவத்தில் ஒரே மாதிரியாக உள்ள சகோதரனை வைத்து தீர்க்க எண்ணுகிறான். வாலியோடு சுக்ரிவன் சண்டையுடும்போது அடையாளத்திற்காக அவனது கழுத்தில் மாலையணியும்படி இராமன் சொல்லுகிறான். அதன்படியே அவர்கள் இருவரும் சண்டை இடுகின்றனர்; இராமன் ஒரு மரத்திற்கு பின்னால் இருந்து ஓர் அம்பை இட்டு வாலியை கொல்லுகிறான். பின்னர் நிறுவபட்ட கிஷ்கிந்தையின் சிம்மாசனத்தில் சுக்ரிவன் அமர்த்தபடுகிறான்.



சுக்ரிவன் சீதையை தேடுவதற்காக வானர படையை நான்கு திசைகளுக்கும் அனுப்புகின்றான். அனுமனுக்கு இராமன் தன்னை அடையாளம் காண ஒரு வைரம் பதித்த மோதிரத்தை தந்து இராமனின் தூதராக சீதையை சந்திக்க அனுப்புகின்றான் .



அனுமான் தன்னுடைய உருவத்தை பெரிதாக்கிகொண்டு தென்னகத்திலுள்ள கடற்கரையை அடைகின்றான். கடல் கடந்து இலங்கையை அடைந்து சீதையை இராவணன் சிறை பிடித்திருக்கும் இடத்திற்கு பெரிதான உருவத்துடன் பாய்ந்து செல்லுகிறான்.

ஆஞ்சநேயன் ராஷ்சச பாய்ச்சலுடன் தாண்டி கடலைக்கடந்து இலங்கை

கரையை அடைகின்றான்.



இலங்கை நுழைவாயிலில் காவலிருந்த லங்கினியை ஒரே அடியில் கொன்றுவிடுகிறான் அனுமன்.

அனுமன் ஒவ்வொரு மூலையிலும் தேடி இறுதியில் இலங்கையின் கடைசி பகுதியான இராவணனின் தோட்டமான அசோகவனத்தில் மழைக்கு ஒதுங்குவது போன்ற இடத்திலிருக்கும் சீதையை கண்டறிகிறான். இராவணன் அச்சுருத்தலின் பேரில் இரண்டு மாதம் ஆகியும் அவனை மணந்துகொள்ள ஒப்புகொள்ளவில்லை. ஆகவே சீதையை இரக்கமின்றி கொன்றுவிடுவதாக கூறுகிறான். அதற்கு இராமன் தவறாமல் வந்து விரைவில் கொல்லுவான் என சீதை கூறுகிறாள்.



பின்னர் இராவணன் ஆத்திரத்தில் பைத்தியம் போல் ஆகின்றான். இராமனின் தூதராக சென்ற அனுமன் சீதையை சந்தித்து மோதிரத்தை தந்து சமாதான படுத்துகிறான். அனுமன் தனது முதுகில் ஏறிகொள்ளுமாறு கூறுகிறான். ஆனால் அனுமனின் மீது பெருமை கொண்டு மறுத்துவிடுகிறாள். இராமன் இராவணனை கொன்று தன்னை மீட்டுசெல்ல அவள் நினைக்கிறாள். சீதை அனுமனிடம் இராமனிடம் தான் உயிருடன் இருப்பதற்கான உத்தரவாதமாக அலங்கரித்திருந்த நகையையும், முடியையும் கொடுத்து அனுப்புகிறாள்.



சீதையின் அவலநிலையை கண்ட அனுமன் மிகுந்த கோபம் கொண்டு அழகான தோட்டத்தை எல்லாம் அழித்து பல ராஷ்ச்சரர்களை கொல்கின்றான். பின்னர் இராவணன் மகன் இந்திரஜித்திடம் அனுமன் பிடிபட்டு அவனை கட்டி இராவணனனிடம் கொண்டு சேர்க்கிறான்.



இராவணன் நீதிமன்றத்தில் அனுமன் அவனது வாலை மிகவும் சுலபமாக உயர்த்தி கம்பீரமான சிம்மாசனத்தை உருவாக்கி அதில் அமர்ந்தான். அவனது இருக்கை இராவணன் இருக்கையை விட உயரமாக இருந்தது. இராமனின் தூதனானக வந்த அனுமன் இராவணனை எச்சரித்தான். ஆனால் இராவணனோ சீதையை திரும்ப அனுப்ப மறுத்துவிட்டான். இராமன் விரைவில் இராவணனை கொன்று அவனது ராஜ்ஜியமும் அழியும் என சீதை கூறுகின்றாள்.

ராவணனன் அனுமன் மீது கோபம் கொண்டு அவனை கொல்ல அச்சுறுத்தபடுகிறது. ஆனால் விபீஷணன் அவனுக்கு நினைவூட்டுகிறான் ராமரின் விசுவாசமாக வந்த தூதராக கொல்லுவது முறையல்ல. குரங்கின் வாலுக்கு தீமூட்டுமாறு ராவணனன் ஆணையிடுகின்றான். அனுமன் எறிகின்ற வாலோடு காற்று வீச பரவலாக அங்கும் இங்கும் குதித்து இலங்கை நகரம் முழுவதையும் தீயினால் எரிக்கிறான்.



விபிஷ்ணன் இராவணனிடத்தில் சீதையை இராமனிடன் அனுப்பும்படி ஒரு முயற்சியுடன் வலியுறுத்துகின்றான். இதனால் கடுங்கோபங்கொண்ட இராவணன் விபிஷ்ணனை இலங்கையிலிருந்து வெளியே அனுப்பி விடுகிறான் .



இராமன் வானரபடையுடன் தென்னக கடற்கரையை அடைகின்றான். விபிஷ்ணன் இராமனது படையை தேடி வருகின்றான். இராமன் மகிழ்ச்சியுடன் அவனது முகாமில் அனுமதிக்கிறான்.



வானரங்கள் கற்கலினால் கடலின் குருக்கே பாலம் அமைக்க
முயற்சிக்கின்றனர். ஒவ்வொரு கல்லும் நீரில் மூழ்குவதை கண்டறிகின்றனர்.
இராமன் கோபத்துடன் அவரது கடலின் கடவுளான சமுத்ரன் மீது
வில்லை எறிகிறான். அவன் பயத்தோடு இராமனிடம் வருகின்றான்.
அப்போது இராமன் அவனிடம் கல்லையெல்லாம் நீரில் மிதக்கும் படி
உருவாக்கச் சொல்லுகிறான்.



பின்னர் குரங்கு படைகள் ஒன்று கூடி மிதக்கும் பாறைகளை கொண்டு கடலின் குறுக்கே பாலம் அமைக்க தொடங்குகின்றனர். அந்த அணிலும் தன் சேவையின் பங்காக இராமனுக்கு தன்னால் இயன்ற சிறுஉதவியை செய்கின்றது. தனது ஈரமான உடலால் மணலில் உருண்டி அம்மணலை கொண்டு போய் பாலத்தில் இருந்த இடைவெளியை அடைக்கின்றது. இராமன் அணிலின் அன்பான பக்தியை மெச்சி அதை கையில் எடுத்து தனது விரலால் தடவி விடுகின்றான். அந்த அணிலுக்கு தக்கவைத்து கொள்ளும் அழகான மூன்று கோடுகள் விழுந்தன. பின்னர் அந்த இனங்களை கண்டு பாசமாக இருந்தான்.

இராமன் அவனது வலிமை மிக்க வானர படையுடன் மிதக்கும் பாலத்தின் மீது கடலை கடந்து இலங்கையை அடைகின்றான்.



பிறகு போர் தொடங்கின்றது, இராவணன் பல வீரர்களை இழக்கின்றான்.



இராவணனின் ராட்சச சகோதரர் கும்பகர்ணன் சாதாரணமாக வருடத்திற்கு ஆறு மாதம் வெல்ல முடியாத நேரத்தை தூக்கத்திற்காகவே முழுவதுவாக ஒதுக்குகின்றான். ஆனால் இராவணனின் ஆணையால் தோல்வியின் பயத்தோடு உரிய காலத்தின் முன்னரே எழுப்பப்படுகிறான்.



வானர கூட்டங்களை கும்பகர்ணன் அழித்துவிடுகிறான். ஆனால் அவன் இராமன் கையினால் மரணமடைகிறான்.



பின்னர் இராவணனின் மகன் இந்திரஜித் ராஷ்ச்சச படையுடன் வீரத்தோடு மேகங்கள் மத்தியில் போராடுகிறான். நாகஹஸ்தரத்தை உபயோகித்து பாம்பால் கயிறு போல் கட்டபட்டு இலஷ்மணன் மயக்கம் அடையசெய்து கிழே தள்ளிவிடுகிறான்.



இராணுவ மருத்துவன் இராமனிடம் சஞ்சீவி மூலிகையை அது கிடைக்கின்ற சஞ்சீவி மலையில் சூரியஉதயத்திற்கு முன் கொண்டுவந்தால் இலஷ்மணனை காப்பற்றமுடியும் என்று கூறுகின்றான். அனுமன் உயரத்தில் பறந்து அம்மலைக்கு செல்கிறான் அம்மூலிகை கண்டுபிடிக்கமுடியவில்லை. ஆகவே அவன் அம்மலையே பெயர்த்து கொண்டு திரும்பி வந்து கொடுத்து இலஷ்மணனைக் காப்பாற்ற உதவுகின்றான்.



மறுநாள் இலஷ்மணன் கடுமையாக போரில் பழிவாங்கி இந்திரஜித்தின் தலையை துண்டிக்க செய்து தோல்வியடைய செய்கிறான்.



பின்னர் சிறந்த வலிமை வாய்ந்த இரு வீரர்களுக்கு மத்தியில் போர் தொடங்குகின்றது. இராமன் பல தலைகள் கொண்ட விரோதியின் அற்புதத்தை கண்டறிந்து மீண்டும் ஒருமுறை முயற்சித்து குழப்பமடைகிறான் .



விபீஷணன் இராவணனின் வாழ்க்கை ரகசியத்தையும் அவனது உடல் பாகத்தில் மிகவும் பாதிக்ககூடிய தொப்பை பகுதியை இராமனிடம் சுட்டி காட்டுகின்றான். இராமன் அதை மறுத்துவிடுகிறான். எதிரியின் தொப்புள் கிழே குறி வைப்பது போர் விதிகளுக்கு புறம்பானது, என கூறி இராவணனின் மார்பின்மீது அம்பால் குறி வைக்கிறான். ஆஞ்சநேயனின் தந்தையான காற்றின் கடவுளான வாயுவிடம் பிரார்த்தனை செய்கிறான். இராமன் இடும் ஒருஅம்பை வாயு திசை திருப்பியவுடன் அடிவயிறு பாகத்தில் பட்டு இராவணன் உடனடியாக இறந்துவிடுகின்றான்.

இராமன்தான் விஷ்ணு என இராவணன் தான் இறக்கும்போது உணர்ந்து அவரை வணங்குகிறான்; இராமனால் காக்கபடுகின்றான்.



சீதையின் தூய்மையைப் பற்றி இராமனுக்கு தெரியும் என்றாலும் , அவளை திரும்ப கூப்பிட்டு செல்வதற்கு தயக்கம் காட்டுகிறான். என்னவெனில் பத்துமாதம் இராவணன் வீட்டில் அடைக்கப்பட்டிருந்ததே. இராமன் ஓர் முன் உதாரணத்தை சீதையிடம் வைக்கிறான். என்னவென்றால் மனித நடத்தை என்பது பிறர் ஏற்கும்படி இருக்கவேண்டும். தனது கணவரான இராமனின் தார்மீக சங்கடத்தை புரிந்துகொண்ட சீதை இராமனின் பார்வைக்காக அல்ல மக்களின் நலம் வேண்டி சீதை தனது தூய்மையை வெளிபடுத்த தீயினுள் இறங்குகிறார். தீயின் கடவுளான அக்னிதேவன் ராமனிடம் சீதையை கொடுத்தவுடன் சபையில் சீதை தூய்மையானவள் என அறிவிக்கப்படுகிறது.



பின்னர் விபிஷ்ணனுக்கு முடிசூடப்பட்டு இலங்கைக்கு அரசனாகிறான். இராமன் புஷ்பப்பல்லக்கு தெய்வீக விமானத்தில் அயோத்திக்கு திரும்புகிறான்.



அயோத்தி மக்களுக்கு மகிழ்ச்சி தரக்கூடிய இந்த நாள். இராமன் முடிசூடப்பட்டு அரசராகின்றான். அவருடைய நடத்தை மனிதனாகவும், அரசனாகவும் ஒரு முன்னுதாரமாக விளங்குகின்றார். அவரது வாய்மை, நீதி, பொறுமையாக இருந்தது போல் அடுத்தடுத்து வயதிலும் இன்னொரு மனிதனை ஒப்பிட்டாலும் சரிக்கு நிகர் காண்பது இயலாது.

ISBN 978-81-945046-5-8